## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் - 2016

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 68 ஆம் இலக்க ஜெனரல் சர்.ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகச் சட்டத்தின் 10(அ)2 பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எண்ணுதல் தவறின் காரணமாக 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சுயமான நிதி நிதியத்தின் கீழ் காட்டப்பட்டிருந்த கட்டிடங்களுக்கான பெறுமானத்தேய்வு ரூபா 22,676,208 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் சுயமான நிதி நிதியத்தில் ஏனைய வருமானங்களின் கீழ் அச்சக வருமானம் என ரூபா 1,187,588 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும், அச்சுப் பகுதியின் தகவல்களின் பிரகாரம் அவ் வருமானம் ரூபா 6,010,213 தொகையாகும். அதன் பிரகாரம் அச்சக வருமானம் ரூபா 4,822,625 தொகையினால் குறைவாகக் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(இ) 2015 ஆண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்த ரூபா 87,414,822 தொகை பெறுமதியான பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் வாயு சீராக்கல் மற்றும் காற்றோட்ட முறைமை 2016 திசெம்பர் 31 திகதி வரை மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் நடைபெறு வேலை என காட்டப்பட்டிருந்தது.

(ஈ) பல்கலைக்கழகத்தினுள் பாதை முறைமை மற்றும் வேலி மறைப்பு நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 29,241,957 தொகை 2014 ஆண்டு முதல் பல்கலைக்கழகத்தின் உருப்படியான சொத்துக்கள் என காட்டப்பட்டிருந்த போதிலும் அவற்றின் பெறுமானத் தேய்விற்கான சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) 2011 ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த ரூபா 1,163,536 தொகை பெறுமதியான உயிர்வாயு அலகு ஒன்று நிதிக்கூற்றுக்களில் உருப்படியான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும் அதற்காக வருடாந்த பெறுமானத் தேய்வு ஏற்பாடு 2011 ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கடெட் உத்தியோகத்தர்கள் உடன்படிக்கைகள் மற்றும் பிணை முறிகளை மீறியதன் காரணமாக பல்கலைக்கழகத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 7,000,223 இற்கான தொகையினை பல்கலைக்கழக வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு பதிலாக சுயகட்டுப்பாட்டு நிதியக் கணக்கிற்கு செலவு வைத்திருந்த போதிலும் அதற்கான காரணம் விளக்கப்படவில்லை.

**2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுயமான நிதி நிதியத்தில் தீர்க்கப்படாத கொள்வனவு முற்பணம் என 2014 ஆண்டு முதல் இடையறாது காட்டப்பட்டிருந்த ரூபா 2,606,394 இற்கான மீதியில் காணப்பட்ட ரூபா 1,454,321 இற்கான தீர்க்கப்படாத முற்பணக் கணக்கு தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தின் நிலையான சொத்துக்களில் உள்ளடங்கியுள் ரூபா 1,491,625 தொகை பெறுமதியான ஏனைய சொத்துக்கள் மற்றும் ரூபா 43,803,874 தொகைக்கான காணிகள் அபிவிருத்திக் கிரயம், 2008 ஆண்டு முதல் இடையறாது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் பிரதிநிதிப்படுத்தும் சொத்துக்கள் பௌதீக ரீதியாக மெய்மையாய்தலுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலையின் கீழ் கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் என ரூபா 13,847,542 இற்கான பெறுமதியொன்று 2011 ஆண்டு முதல் இடையறாது முன்கொண்டு வரப்பட்டு காணப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் பிரதிநிதிப்படுத்தும் சொத்துக்கள் பௌதீக ரீதியாக மெய்மையாய்தலுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் கடன்கொடுத்தோர் மீதிகள் என ரூபா 1,511,181,993 தொகை காட்டப்பட்டிருந்ததுடன், அப் பெறுமதியில் 02 வருடங்களை விட மிகையான காலம் முதல் தீர்க்கப்படாமல் காணப்பட்ட ரூபா 14,403,186 இற்கான கடன்கொடுத்தோர் மீதி மற்றும் 02 வருடங்களை விட மிகையான காலம் முதல் தீர்க்கப்படாமல் காணப்பட்ட ரூபா 27,703,433 இற்கான செலுத்த வேண்டிய செலவுகளும் உட்படுத்தப்பட்டுக் காணப்பட்டது.

**2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

---

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 237(ஆ) | கொள்வனவு செய்யப்படும் பண்டங்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்வதற்கு முன்னர் உரிய அனைத்து பண்டங்களும் கிடைத்துள்ளன எனவும் பொருத்தமான இருப்புப் பதிவேட்டில் அப் பண்டங்கள் உட்படுத்தப்பட்டது எனவும் சான்றுபடுத்தப்பட்ட |

| | | |
|---|---|---|
| | | வேண்டுமெனினும், அதற்கு முரணாக 2016 ஆண்டின் போது 670 சந்தர்ப்பங்களில் பண்டங்கள் கொள்வனவு செய்வதற்கு முன்னர் முற்பணமாக ரூபா 122,803,287 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேற்கூறியவாறு கடந்த 05 வருட காலத்தில் செலுத்தியிருந்த ரூபா 92,112,669 தொகையான முற்பணம் 2016 திசெம்பர் 31 திகதி வரை தீர்த்திருக்கவில்லை. |
| (ஆ) | 2006 அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பிரிவு 8.9.1(ஆ) | ரூபா 500,000 பெறுமதியை மிகைக்கும் பண்டங்கள் கொள்வனவின் போது முறையான எழுத்துமூல உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் ரூபா 19,712,855 தொகை பெறுமதியான 04 ஒப்பந்த வேலைகள் தொடர்பாக முறைசார் விதமாக எழுத்துமூல உடன்படிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் | 2006 ஜனவரி 01 திகதி முதல் 2011 மே 11 திகதி வரையான காலப்பகுதியில் பல்கலைக்கழகத்தினால் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 8,210,785 தொகையான பங்களிப்புத் தொகை 2016 திசெம்பர் 31 திகதி வரை அனுப்பியிருக்கவில்லை. |

## 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பல்கலைக்கழகத்தின் போதனா வைத்தியசாலை நிர்மாணிப்பதற்காக தேசிய சேமிப்பு வங்கியில் இருந்து பெற்றிருந்த கடன் தொகைக்கான வட்டி செலுத்துவதற்காக 2014 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை ரூபா 4,554,308,836 இற்கான நிதி ஏற்பாடுகள் திறைசேரியில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 2016 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 4,486,387,102 இற்கான தொகை ஒன்று மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. கடந்த 02 வருட காலப்பகுதியில் கிடைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 67,921,734 தொகையான மேலதிக ஏற்பாடுகளை திறைசேரியின் அங்கீகாரமின்றி பல்கலைக்கழகத்தின் ஏனைய விடயங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது.

# 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 955,434,499 இற்கான பற்றாக்குறை ஒன்றுகாணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 676,191,883 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 279,242,616 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது பல்கலைக் கழகத்தின் போதனா வைத்தியசாலை நிர்மாணித்தல் கிரயத்தில் காணப்பட்ட செலாவணி அனுகூலமற்ற நிலை ரூபா 1,310,332,348 தொகை இனால் மற்றும் பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு கிரயம் ரூபா 207,950,617 இனால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு முக்கியமான காரணியாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 4 வருடங்களில் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 மற்றும் 2014 ஆண்டுகளின் போது முறையே ரூபா 36,566,608 இற்கான மற்றும் ரூபா 250,842,194 இற்கான மிகை ஒன்றினை தோற்றுவித்திருந்த போதிலும் 2013,2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது நிதி விளைவுகளில் பற்றாக்குறையொன்று தோன்றியிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு 2012 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை இடையறாது அதிகரித்திருந்த போதிலும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது அது ரூபா 168,521,705 இனால் வீழ்ச்சி அடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியாக நிதி மீளாய்வு

பல்கலைக்கழகத்தின் 2016 மற்றும் 2015 ஆண்டுகளின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிதி நிலைமை தொடர்பான முக்கியமான குறுகிய கால மற்றும் நீண்டகால கடன் மீட்பு ஆற்றல் தொடர்பாக சில விகிதாசாரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2016 | 2015 |
|---|---|---|
| | % | % |
| உரிமை மூலதனத்திற்கு நீண்ட காலக் கடன் மூலதனம் | 389 | 367 |

| | 2016 | 2015 |
|---|---|---|
| | (ரூபா) | (ரூபா) |
| ஒரு மாணவ வருமானம் | 604,536 | 747,759 |

பல்கலைக் கழகத்தினால் போதனா வைத்தியசாலை நிர்மாணிப்பதற்காக கடன் பெற்றிருந்த காரணத்தினால் கடந்த வருடத்தை விட உரிமை மூலதனத்திற்கு மற்றும் மொத்த மூலதனத்திற்கு நீண்ட காலக் கடன் மூலதன விகிதாசாரம் அதிகரித்திருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ஒரு மாணவ வருமானம் ரூபா 143,223 இனால் அதாவது 19.13 சதவீதத்தினால் குறைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1981 இன் 68 ஆம் இலக்க ஜெனரல் சர்.ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பயிற்சி நிலையச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டிருந்த இந்த நிறுவனம், 2011 ஆண்டு வரை பாதுகாப்பு சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்காக பாதுகாப்பு அலுவல்கள் தொடர்பாக பட்டப் பாடநெறிகள் நடாத்துவதற்காக மாத்திரம் என வரையறுக்கப்பட்டிருந்தது. 1988 இன் 27 ஆம் இலக்க திருத்திய சட்டம் மற்றும் 2007 இன் 50 ஆம் இலக்க திருத்திய சட்டத்தின் படி மேற்கூறிய நிறுவனம் பல்கலைக் கழக தரத்திற்கு உயர்த்தப்பட்டிருந்த போதிலும் பாதுகாப்பு சேவைகளில் சேவையாற்றாத மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்குவதற்காக அதிகாரமளிக்கும் பிரிவுகள் மேற்கூறிய சட்டங்களில் உள்ளடங்கியிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2011 ஆண்டு முதல் 2016 திசெம்பர் 31 திகதி வரை பணம் செலுத்தும் அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த வெளிநாட்டு மாணவ மாணவிகள் 199 பேரும் உட்பட 2845 மாணவ மாணவிகளுக்கு பட்டச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பல்கலைக் கழகத்தில் உள்நாட்டு மாணவ மாணவிகள் 3073 பேர் கல்வி விடயங்களில் ஈடுபட்டிருந்ததுடன், அவற்றில் 1,728 மாணவ மாணவிகள் கட்டணம் செலுத்தும் அடிப்படையிலும் மீதியான 1,345 மாணவர்கள் கட்டண விடுதலை அடிப்படையின் மீது சேர்க்கப்பட்டிருந்த முப்படைகளில் கடமையாற்றிய கடெட் உத்தியோகத்தர்களாகும். மீளாய்வாண்டின் போது உள்நாட்டு மாணவ மாவணவிகள் 829 பேர் பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்ட 22 பாடநெறிகளுக்கு சேர்க்கப்பட்டிருந்ததுடன், அது முன்னைய ஆண்டின் போது சேர்க்கப்பட்டிருந்த 850 மாணவ எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது 2.47 இற்கான சதவீதம் குறைவாகக் காணப்பட்டது. பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு கட்டணம் அறவீடு செய்யும் அடிப்படையில் வெளிநாட்டு மாணவ மாணவிகள் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்ததுடன் கடந்த ஆண்டு சேர்க்கப்பட்டிருந்த மாணவ மாணவிகள் 54 பேருக்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது மருத்துவ மாணவ மாணவிகள் 23 பேர் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(இ) எதிர்கால நிதித்தேவை மற்றும் சந்தையின் போட்டித் தன்மை போன்ற சவால்களை வெற்றி கொள்வதற்காகவும், போதியளவினதாக வருமானத்தை அதிகரிப்பதற்காகவும், பல்கலைக்கழகம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் பண அடிப்படையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவ மாணவிகள் சேர்த்துக் கொள்ளல் முறைப்படுத்தப்பட வேண்டியதுடன், அதன் பிரகாரம் பண அடிப்படையில் வெளிநாட்டு மாணவ மாணவிகளை ஈர்க்கக் கூடிய விதமாக போட்டி அடிப்படையிலான வேலைத்திட்டமொன்றின் தேவை தொடர்ந்தும் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. 2016 திசெம்பர் 31 திகதி அளவில் பூதான அரசு மற்றும் ருவண்டா அரசுகளுடன் மாத்திரம் அதற்கு ஏற்ற விதமாக புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று மேற்கொள்வதற்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2016 திசெம்பர் 31 திகதியளவில் 346 மாணவ மாணவிகள் தென் வளாகத்தில் கல்வி விடயங்களை மேற்கொண்ட போதிலும் 8 விரிவுரை மண்டபங்களைக் கொண்ட இந்த வளாகத்தின் கல்வி விடயங்களுக்காக காணப்படும் விரிவுரை மண்டபங்களின் கொள்ளளவு போதியளவு மட்டத்தில் காணப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. பல்கலைக் கழகத்தின் தென் வளாகத்தினால் நடாத்தப்படும் கணினி பீடத்தைச் சேர்ந்த பாடநெறிகளுக்காக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 166 மாணவ மாணவிகள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கு கணினி கல்வி வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் வெளி சார்ந்த அறிவியல் பீடத்தைச் சேர்ந்த கணினி ஆய்வு கூடத்தில் கணினி பீடத்தின் மாணவர்கள் கல்வி விடயங்களில் ஈடுபட்டிருந்தனர். தென் வளாகத்திற்காக நிரந்தர நூலகக் கட்டிடமொன்று நிர்மாணித்து இருக்காமையால் பட்டம் எதிர்பார்ப்பாளருக்கான நூலகம் சுமார் 1152 சதுர அடி பரப்பளவினைக் கொண்ட வேய்தல் தகடுகளினால் திருப்பிக் கட்டப்பட்ட கட்டிடமொன்றில் நடாத்தப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

## 4.2 முகாமைத்துவத் தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்காக வேரஹர பகுதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சை கூடத்திற்காக ரூபா 26,928,000 தொகை பெறுமதியான 13 ஒளி முறைமைகள் 02 தனியார் நிறுவனங்களில் இருந்து 2015 ஆகஸ்ட் 13 திகதி அளவில் வைத்தியசாலை வளவிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் போதியளவு களஞ்சிய வசதிகள் இன்மையால் அந்த உபகரணங்களை வழங்கிய நிறுவனத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

மேலும், வைத்தியசாலைக்காக ரூபா 24,090,730 தொகை பெறுமதியான கமரா உடனான சத்திர சிகிச்சை கூட மின்வலு ஒளி முறைமைகள் 06 கொள்வனவு செய்வதற்காக பெறுமதியில் 80 சதவீதத்திற்கு சமமான ரூபா 19,272,584 இற்கான தொகையொன்று முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. குறிப்பிட்ட பண்டங்கள் 2015 நவம்பர் 10 திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும் போதியளவு களஞ்சிய வசதிகள் காணப்படாமையால் அந்த நிறுவனத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. போதனா வைத்தியசாலையின் அலுவல்கள் 2017 மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தமையால் தேவைக்கு முன்னர் பண்டங்களை கொள்வனவு செய்து 18 மாதங்களை விட மிகையான காலம் குறிப்பிட்ட சொத்துக்கள் வெளிசாராருக்கு சொந்தமான வளவில் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) பல்கலைக்கழகத்தின் போதனா வைத்தியசாலை கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக திறைசேரியின் பிணை முறி ஒன்றின் மீது 2013 மார்ச் 28 திகதி 177 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்காக வெளிநாட்டு பணத்தினால் ஆன கடன் ஒன்றும் மற்றும் ரூபா 3,165,123,000 இற்கான உள்நாட்டு கடன் ஒன்று தேசிய சேமிப்பு வங்கியில் இருந்து பெற்றிருந்தது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், உள்நாட்டு பணத்தின் மூலம் பெற்றிருந்த கடன்தொகை பல்கலைக் கழகத்தினால் 2032 ஆண்டளவில் முற்றாக முற்றாக செலுத்த வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு விடயங்களின் மூலம் இடையறாமல் நட்டமடைந்துள்ளமையும், பணம் அறவீட்டு அடிப்படையில் சேர்க்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக போதியளவினதான வேலைத் திட்டமொன்றினை கடைபிடிக்காத காரணத்தினால் பல்கலைக் கழகத்தினால் இணங்கிய பிரகாரம் கடன் தவணைப் பணத்தினை செலுத்துவது ஆபத்து நிலைமையொன்று காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டமையால் அது தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஏப்ரல் 18 திகதி மேற்கொண்ட பௌதீகப் பரிசோதனையின் போது ஓட்ட நிலையில் காணப்பட்ட 08 வாகனங்களின் மைலோ மீற்றர்கள் ஒரு வருட காலத்தை விட மிகையான காலம் முதல் செயற்படாமல் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் அவ் வாகனங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஓட்ட அட்டவணைகளின் பிழையற்ற தன்மை தொடர்பாக கணக்காய்வில் சிக்கல் தன்மை காணப்பட்டதுடன், மைலோ மீற்றர்களை உரிய நிலைக்கு மாற்றுவதற்காக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

உயர் ஆய்வுகள் மற்றும் கல்வி ஒருங்கிணைப்புச் செயற்திட்டத்தின் கீழ் தெங்கு முற்தயாரிப்பு உற்பத்தி பொருட்கள் மற்றும் ஆய்வு விடயங்களுக்காக ரூபா 10,948,998 இற்கான கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டு தென் வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடமொன்று பல்கலைக்கழக மாணவர்கள் உடல் ஆரோக்கிய மத்திய நிலையமொன்றாக பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் காரணமாக தென் வளாகத்தினால் நிறைவேற்றுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தெங்கு முற்தயாரிப்பு உற்பத்தி பொருட்கள் மற்றும் ஆய்வு விடயங்கள் 2016 திசெம்பர் 31 திகதி அளவிலும் செயற்படுத்தியிருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**4.4 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தினால் பெறுகைகள் திட்டம் தயாரித்திருந்த போதிலும் அதற்காக திறைசேரியின் நிதியேற்பாடுகளின் மூலம் நிதியளிப்பு செய்வதற்கு எதிர்பார்த்துள்ள மூலதன செலவுகள் மாத்திரம் உற்படுத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் சுயமான நிதி நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவுகள் அவற்றிற்கு உட்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) தென் வளாகத்தில் நீர் வழங்கள் முறைமையொன்று நிறுவுதல் மற்றும் நீர் தொட்டிகள் கொள்வனவு செய்வதற்காக தனிப்பட்ட சாராருக்கு 2015 மார்ச் 09 திகதி வழங்கியிருந்த ரூபா 2,871,570 தொகைக்கான ஒப்பந்த வேலையின் விடயங்கள் 2016 திசெம்பர் 31 திகதி வரையும் பூர்த்தி செய்திருக்கவில்லை. இதற்காக எழுத்துமூலமான உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருக்காததுடன் விடுவிக்கப்பட்டிருந்த தயாரிப்பு முற்பணத்திற்கான செயலாற்றுகை பிணை முறி ஒன்று பெற்றிருக்கவில்லை.

(இ) 143 ஏக்கர்கள் கொண்ட தென் வளாகம் அமைந்துள்ள காணியில் 18 ஏக்கர் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரித்தாக இருந்ததுடன், ஏனைய 125 ஏக்கர் நிலம் மொனறாகலை மாவட்டத்தைச் சேர்ந்த செவனகல பிரதேச செயலகப் பிரிவினை சேர்ந்ததாகும்.

சூரியவெவ பிரதேச செயலக பிரிவிலுள்ள காணி இலங்கை முதலீட்டு சபைக்கு உரித்தாக இருந்ததுடன், அந்த காணியை பல்கலைக்கழகத்திற்கு உரித்தாக்கும் அலுவல்கள் 2016 திசெம்பர் 31 திகதி அளவிலும் பூர்த்தி செய்திருக்கவில்லை. 2011 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட தென் வளாகத்தை சேர்ந்த கட்டிடங்களின் நிர்மாண வேலைகள் 2018 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களின் அலுவல்கள் போதியளவு நிதியங்கள் இன்மையால் மந்த நிலையில் நடைபெறுகின்றது என பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. தென் வளாகத்தின் நிர்மாண வேலைகள் தொடர்பாக சுற்றாடல் சார் விதப்புரைகள் மத்திய சுற்றாடல் அதிகார சபையில் இருந்து வேண்டியிருந்த போதிலும், 2015 ஏப்ரல் 23 மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வெளிக்கள பரிசோதனை ஒன்று மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் திட்டமிட்ட நிர்மாண வேலைகளில் ஒரு பகுதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையினால் அதற்காக சுற்றாடல் விதப்புரையொன்று வழங்க முடியாது என அறிவிக்கப்பட்டிருந்தது.

## 4.5 பதவியணி நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக் கழக விடயங்களுக்காக இணைக்கப்பட்டிருந்த முப்படை உத்தியோகத்தர்கள் தொடர்பாக விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| உரிய நிறுவனம் | இணைக்கப் பட்டிருந்த பதவி நிலை உத்தியோகத்தர் எண்ணிக்கை | இணைக்கப் பட்டிருந்த பதவி நிலை அல்லாத உத்தியோகத்தர் எண்ணிக்கை | மொத்த தொகை |
|---|---|---|---|
| இலங்கை தரைப்படை | 72 | 456 | 528 |
| இலங்கை கடற்படை | 30 | 351 | 381 |
| இலங்கை வான்படை | 15 | 122 | 137 |
| மொத்தம் | 117 | 929 | 1,046 |

அங்கீகரிப்பட்டிருந்த பதவியணிக்கு மேலதிகமாக பல்கலைக்கழகத்தில் சேவை செய்யும் படை உத்தியோத்தர்கள் தொடர்பாக முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தில் இருந்து முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளும் படி அரச முயற்சிகள் தொடர்பாக பாராளுமன்ற குழுவினால் 2013 மார்ச் 05 திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் ஆலோசனை வழங்கியிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 திகதி அளவிலும் அதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) தென் வளாகத்தில் மூன்று பீடங்களின் கீழ் நடாத்தப்படுகின்ற 05 பாடநெறிகளுக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த ஆசிரியர்கள் குழாம் 76 பேர் எனினும் 33 பேர்களைக் கொண்ட ஆசிரியர் குழாம் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்தனர். மேலும் இந்த வளாகத்தின் ஆசிரியர்கள் தொடர்பான தகவல்களை பகுப்பாய்வு செய்த போது 12 பேராசிரியர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 திகதி வரை பேராசிரியர்கள் எவரும் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. வளாகத்தில் 42 சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர 31 திகதி அளவில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் 12 பேர் மாத்திரம் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் பீஈடீ/12 இன் பிரிவு 6.5 இன் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் பல்கலைக்கழகத்தின் வரைவு நிதிக்கூற்று 2017 பெப்ரவரி 28 திகதியளவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டு குறைபாடுகளுக்கான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் திருத்தப்பட்ட நிதிக்கூற்று 2017 ஜுன் 29 திகதியன்றே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

போக்குவரத்துச் செலவுகள், உடன்படிக்கை சேவை செலவுகள், ஏனைய செலவுகள் மற்றும் மூலதன செலவுகளுக்காக மீளாய்வாண்டிற்கான பாதீட்டு செலவுகள் மற்றும் உள்ளவாறான செலவுகளிடையே 10 சதவீதம் முதல் 201 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாகப் பயன்படுத்தியிருக்கவில்லை.

### 5.3 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 47 ஏக்கர் 37.9 ரூட் அளவான காணி ஒன்றில் பல்கலைக்கழகத்தின் போதனா வைத்தியசாலை நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 திகதி வரை அதனது உரிமையை உரித்தாக்கியிருக்கவில்லை.

### 5.4 முகாமைத்துவ சபையின் அமைப்பு

1981 இன் 68 ஆம் இலக்க ஜெனரல் சர்.ஜோன் கொத்தலாவல அரச பாதுகாப்பு நிறுவனச் சட்டத்தின் பிரகாரம் காட்டப்பட்டிருக்காத அரச பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் மற்றும் முகாமைத்துவ சபையின் செயலாளர் ஆகிய உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்களாக மீளாய்வாண்டின் போதும் செயற்பட்டிருந்தனர்.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| (அ) ஒப்பந்த வேலை நிருவாகம் | | எழுத்துமூல உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஆ) கொள்வனவு நிருவாகம் | i. | அரச நிதிப் பிரமாணங்கள் மற்றும் பெறுகைகள் வழிகாட்டல்களுக்கு புறம்பாக பண்டங்கள் கொள்வனவு செய்தல். |
| | ii. | பண்டங்கள் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் முற்பணங்கள் செலுத்துதல். |